ஓம்




3L
Q26ணூ21, N37J1
N144.4.4
139505

## பொருளடக்கம்.


| | | | | |
|---|---|---|---|---|
| திருப்புகழ் | சனமிகுத் துளபிறவி | ௭௩ | கற்பு | ௮௮ |
| ,, | சலமலம் விட்ட | ௭௬ | உள்ளங் கவர் கள்வன் | ௯௫ |
| அலங்காரம் | பாதித் திருவுருப் | ௮௪ | | |




ஓம் குஹாய நம:

# "திருப்புகழமிர்தம்" சந்தா விவரம்.

ஆண்டு 1-க்கு தபாற்கூலி யுள்பட } இந்தியா, சிலோன், .... ரூ. 2-0-0
தனிப்பிரதி கிடைக்காது.

1. சந்தாதாரராகச்சேருகின்றவர்கள், ஆண்டுக் கட்டணத்தை முன்னதாகவே மணியார்டர் அநுப்பவேண்டும். மணியார்டர் கூபனில் தங்கள் முழு விலாசத்தையும் தெளிவாக எழுதியநுப்ப வேண்டும்.

2. நமது பத்திரிகை ஒவ்வொரு சித்திரையினின்றே தொடங்கும். ஆதலால், நேயர்கள் எந்தத் திங்களில் சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அவ்வாண்டு சித்திரையினின்றே இதழ்கள் அநுப்பப் படும். ஒரு ஆண்டுக்குக் குறைந்த சந்தா கிடையாது.

3. இதழ் கிடைக்கப்பெருத சந்தா நேயர்கள், அத் தமிழ்த் திங்கள் 10௨க்குள் எழுதிப் பெறவேண்டும். அதற்குமேல் எழுதுவோர் பணஞ் செலுத்திப் பெறவேண்டும். இதழ் கிடைக்கப் பெருதவர்கள் தமது ஊர் தபாலதிகாரிகளுக்குந் தெரிவிக்க வேண்டும்.

4 விலாசமாறுவோர், தமது மாறுதல் விலாசத்தை உரிய காலத்திற்குள் நமது காரியாலயத்திற்கும், போஸ்டாபீசுக்கும் தெரிவிக்கவேண்டும் இன்றேல் பழைய விலாசத்திற்கே அடுத்த இதழ் அநுப்பப்படும். அதற்கு யாம் பொறுப்பாளியல்ல.

---


உயர்ந்த வேலைப்பாட்டுக்குக் காரண்டி
அசல் வெள்ளிசாமான்களும், வெள்ளி நகைகளும்
உத்திரவாதத்துடன் கிடைக்கும் இடம்.

**வ. ரு. புருஷோத்தம செட்டியார்**

தங்கம், வெள்ளி நகை வர்த்தகம்
(பூஜைக்குகந்த வெள்ளி உருவப் படங்களும் கிடைக்கும்.
நெ. 47, சைனாபஜார் ரோட்டு, சௌகார்பேட்டை மதராஸ்)

உ

ஓம் குஹாய நம:

# திருப்புகழமிர்தம்

(All Rights Reserved)

"குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் ருள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்"

மலர் ௯. Vol 9 | தாரண ஞு ஆடி மீ 1உ ஜூலை 1944 | இதழ். ௪. No 4.

## திருப்புகழ்

### ஆறு திருப்பதி.

ஈனமிகுத் துளபிறவி யணுகாதே-
யானுமுனக் கடிமையென வகையாக;
ஞானஅருட் டனையருளி வினைதீர-
நாணமகற் றியகருணை புரிவாயே;
தானதவத் தினின்மிகுதி பெறுவோனே-
சாரதியுத் தமிதுணைவ முருகோனே;
ஆனதிருப் பதிகமரு ளிளையோனே-
ஆறுதிருப் பதியில்வளர் பெருமாளே.

பதவுரை.

தான தவத்தினில் மிகுதி பெறுவோனே - அடியார்கள் புரியும் தானத்தின் தகைமையையும் தவத்தின் நியானத்தையும் மிகுதியாகப் பெறுகின்றவரே! சாரதி உத்தமி துணைவ - சரஸ்வதி தேவியாகிய உத்தமியின் சகோதரரே! முருகோனே - முருகக் கடவுளே! ஆனதிருப்பதிகம் அருள் இளையோனே - திருஞான சம்பந்தரை யதிஷ்டித்து தமிழ்மறையாகிய தேவாரப்பதிகங்களை பாடிய இளம்பூரணரே! ஆறு திருப்பதியில் வளர் - ஆறுபடை வீட்டுத் திருத்தலங்களில் வளர்கின்ற, பெருமாளே-பெருமையின்

மி[illegible]குத் [illegible] உளபிறவி அணுகாதே - ஈனமே மிகுந்துள்ள பி[illegible]லில் ஆழ்ந்து அழியாமல், யானும் உனக்கு அடிமையென வகையாக - அடியேனும் தேவரீருக்கு அடிமையென்று வகைப்பட்டுய்ய, ஞான அருள்தனை அருளி - மெய்ஞ்ஞான அருளைப்புரிந்து, வினை தீர - அடியேனது வினைகள் அறவே நீங்க, நாணம் அகற்றிய கருணை புரிவாயே - வள்ளியம்மையாரிடத்தில் நாணமகற்றிப்போய் அருளிய திருவருளை அடியேனுக்குத் தந்தருள்வீர்.

## பொழிப்புரை.

தானம் தவம இவற்றிற்குத் தலைவராக விளங்கி அவற்றின் பயனை மிகவும் பெறுபவரே! வாணிதேவிக்குச் சகோதரரே! முருகக் கடவுளே! திருஞானசம்பந்தரை யதிஷ்டித்து தமிழ் மறையாகிய தேவாரப்பதிகங்களைப் பாடியருளிய இளமையானவரே! ஆறுபடைவீட்டுத் தலங்களிலும் எழுந்தருளியுள்ளவரே! ஈனமிகுந்த இப் பிறவியை அடியேன் அடையாமல், உமது அடிமையாகி உய்ய சிவஞானஅருளைத் தந்து என் வினை தீர, தேவரீரது எளிமையான வான் கருணையை வழங்கியருள்வீர்.

## விரிவுரை.

ஈனமிகுத்துளபிறவி :—

சின்னாள் வாழ்க்கை, பல்வகை நோய், பசி மூப்பு முதலியவை பொருந்தி யிடர் விளைப்பதால் ஈனமிகுத்துள பிறவி யென்றார்.

அடிமையென :—

ஆண்டானடிமைத் திறத்தையுணர்த்துகின்றனர்.

அருள்தருளி எனையுமனதொ
டடிமை கொளவும் வரவேணும

—திருப்புகழ்.

நாண மகற்றிய கருணை :—

தான் சிவகுருநாதனாக இருந்தும் மூவர் தேவாதிகள் தலைவனாக இருந்தும் குறமாதினிடம் நாணமின்றிச் சென்றனர். அவ்வம்மையை யாட்கொள்ளும் கருணையின் எளிமையே அதற்குக் காரணம்.

" நாண மழிந்துரு மாறியெ வஞ்சக
நாடிய பங்கய பதநோவ
* * *
மாமுனிவன் புணர் மானுதவுங்கனி
மானை மணஞ் செய்த பெருமாளே "

—திருப்புகழ்.

**சாரதி உத்தமி துணைவ :—**

திருமாலின் புதல்வராகிய பிரமதேவர் முருகப்பெருமானுக்கு மைத்துனராவார். மைத்துனன் மனைவி சகோதரி முறையாதலின் "சாரதி யுத்தமி துணைவ" என்றனர்; உத்தமி யென்று வாணிதேவியை வியந்து பாராட்டுவது சிந்தித்தற்குரியது.

**ஆனதிருப்பதிகமருள் இளையோனே :—**

ஞானசம்பந்தராக முருக சாருபம் பெற்ற அபர சுப்பிரமணியர் அவதரித்தனர். அவரை அதிட்டித்து முருகன் தமிழ்மறையைப் பாடியருளினர்.

**ஆறு திருப்பதி :—**

ஆறு திருப்பதிகளாவன :—

(1) திருப்பரங்குன்றம்
(2) திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்)
(3) திருவாவினன்குடி (பழநி)
(4) திருவேரகம் (சுவாமிமலை)
(5) குன்றுதோருடல் (பல மலைகளும்)
(6) பழமுதிர் சோலை.

இந்த படைவீட்டுத்தலங்கள் ஆறும் நமக்குள் ஆதாரங்கள் ஆறனையுங் குறிக்கின்றன.

மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்ற ஆறு ஆதாரங்களிலும் எழுந்தருளியிருப்பவர் ஆறுமுகப் பெருமான்.

" ஆறுதிருப்பதிகண் டாறெழுத்தை யன்பினுடன்
கூறுமவர் சிந்தை குடிகொண்டோனே "

—கலி வெண்பா.

## கருத்துரை.

தானத்திற்குந் தவத்திற்குந் தலைவரே! சாரதி துணைவ! முருகா! தேவாரப் பாடல் பாடியருளியவரே! ஆறு திருத்தலமுடையவரே! பிறவியை யொழித்து உமது அடிமையாக ஞானத்தைத் தந்து அருள்புரிவீர்.

## காஞ்சீபுரம்
(பிருதிவிஸ்தலம்.)

சலமலம் விட்டத் தடம்பெ ருங்குடில்
சகல வினைக்கோத் திருந்தி டும்படி
சதிர வுறுப்புச் சமைந்து வந்தேர்ரு தந்தைதாயும்-

தரவரு பொய்க்குட் கிடந்த கந்தலி
லுறையு முயிர்ப்பைச் சமன்து ரந்தொரு
தனியி லிழக்கப் படுந்த ரங்கழும் வந்திடாமுன்;

பல வுரு வத்தைப் பொருந்தி யன்றுயர்
படியு நெளிக்கப் படர்ந்த வன்கண
படமயில் புக்குத் துரந்து கொண்டிகல்
வென்றிவேலா-

பரிமள மிக்கச் சிவந்த நின்கழல்
பழுதற நற்சொற் றெரிந்து அன்பொடு
பகர்வ தினிச்சற் றுகந்து தந்திட வந்திடாயோ;

சிலையு மெனப்பொற் சிலம்பை முன்கொடு
சிவமய மற்றுத் திடங்கு லைந்தவர்
திரிபுர மத்தைச் சுடுந்தி னந்தரி தீண்கையாளி-

திருமகள் கச்சுப் பொருந்தி டுந்தன
தெரிவை யிரக்கத் துடன்பி றந்தவள்
திசைகளி லோக்கப் படர்ந்தி டம்பொரு கின்றஞானக்;

கலைகள ணைக்கோத் தடர்ந்து வம்பலர்
நதிகொள கத்திற் பயந்து கம்பர்மேய்
கருக இடத்திற் கலந்தி ருந்தவள் கஞ்சபாதங்-
கருணை மிகுத்துக் கசிந்து ளங்கொடு
கருது மவர்க்குப் பதங்கள் தந்தருள்
**கவுரி திருக்கொட் டமர்ந்த இந்திரர் தம்பிரானே.**

பதவுரை.

முன் - முன் ஒரு காலத்தில் சிவமயம் அற்று - சிவபெருமான் மீது அன்பு நீங்கி, திடம் குலைந்தவர் - உறுதியினின்றும் வழுவியவர்களும், திரிபுரம் அத்தை - திரிபுரவாசிகளுமாகிய அவுணர்களையும் அவர்கள் வாழும் மூன்று புரங்களையும், சிலையும் என பொன் சிலம்பை - பொன் (மேரு) மலையை வில்லாகக் கொண்டு, சுடும் - (சிரித்து) எரித்தவரும், தினம் தரி - என்றுமுள்ளவரும், திண் கை ஆளி - வலிமை பொருந்திய கரத்தையுடையவரும், திருமகள் - மகாலட்சுமியும், கச்சு பொருந்திடும் தன தெரிவை - இரவிக்கையை யணிந்துள்ள தனபாரங்களுடன் கூடிய பெண்மணியாரும், இரக்கத்துடன் பிறந்தவள் - கருணையுடன் தோன்றியவரும், திசைகளில் ஒக்கபடர்ந்து, எல்லாத் திசைகளிலும் பொருந்த வியாபித்து, இடம் பொருகின்ற - கரைகளிலுள்ள இடத்துடன்போர்புரிந்து; ஞான கலைகள் அணை ஞான சாத்திரங்களுடனு் கலந்து, வம்பு அலர் கொத்து அடர்ந்து - நறுமணங் கமழ்கின்ற பூங்கொத்துகள் நெருங்கியுள்ள, நதி கொள - கம்பா நதி பெருகிவர, அகத்தில் பயந்து - சிவலிங்கத் திருமேனி வெள்ளத்தில் சலனமுறுமே என்று உள்ளத்தில் அச்சமுற்று, கம்பர் மெய் கருக - சிவலிங்கத்தைத் தழுவி இறைவனது திருமேனி பச்சென்ற நிறத்தையடைய, இடத்தில் கலந்து இருந்தவள் - இடப்பாகத்திற் கலந்து விளங்கியவரும், கஞ்சபாதம் - தனது திருவடித்தாமரைகளை, கசிந்து உளம்கொடு - மனங்கசிந்து உள்ளத்தில் கொண்டு, கருதும் அவர்க்கு - நினைக்கின்ற மெய்யடியார்களுக்கு, கருணைமிகுத்து - நிறைந்த கருணையுடன், பதங்கள் தந்து அருள் - இந்திரபதம் பிரமபதம் விண்டுபதம் உருத்திரபதம் முதலிய சிறந்த பதங்களைத்தந்து அருள்புரிகின்றவரும் ஆகிய, கவுரி திருக்கொட்ட அமர்ந்த - பொன்னிறமுடைய காமாக்ஷியம்மையினது திருக்கோட்டமாகிய காஞ்சிபுரத்தில் எழுந்தருளியுள்ள, இந்திரர் தம்பிரானே - இந்திராதியிமையவர்கட்கெல்லாம் தலைவராகிய பெருமையின் மிக்கவரே! சலம் மலம் விட்ட - மூத்திரமும் மலமும் நிறைந்த, தடம் பெரும் குடில் - விசாலமான

பெரிய குடிசையும், சகல வினை கொத்து இருந்திடும்படி-நல்வினை தீவினையாகிய எல்லா வினைக்கூட்டமும் இருக்குமாறு, சதிர உறுப்பு சமைந்து வந்து—சோற்றுக்கிடமாக அங்கங்களுடன் உண்டுபண்ணப்பட்டுவந்து, ஒரு தந்தை தாயும் தரவரு - ஒப்பற்ற தந்தையும் தாயும் தரவருகின்றதும், பொய்க்குள்கிடந்த கந்தலில்-பொய்யினுக்குள் கிடப்பதுமாகிய கந்தலிலும் ஒன்பது ஒட்டைகளுடன் கூடியதுமாகிய இந்த உடம்பினுக்குள், உறையும் உயிர்ப்பை—வாழுகின்ற பிராணவாயுவை, சமன் துரந்து—கூற்றுவன் துரத்திவந்து, ஒரு தனியில் இழுக்கப்படும் தரங்கமும்—தன்னந்தனியாக ஈர்த்துக்கொண்டுபோகும் கலக்கமானது, வந்திடாமுன் — அடியேனுக்கு வருவதற்கு முன்னர், பல உருவத்தை பொருந்தி-மஞ்சள் பச்சை நீலம் முதலிய பல நிறத்துடன் கூடியதும், அன்று உயர் படியும் நெளிக்க படர்ந்த-போர்புரிந்த, அந்நாளில் விண்ணுலகம் நெளிந்ததேயன்றி மண்ணுலகமும் நெளியுமாறு நடந்ததும், வன்கண படம் - வலிமை பொருந்திய பாம்பின் படத்தின் மீது காலையூன்றியிருப்பதுமாகிய, மயில் புக்கு - மயில் மீது ஊர்ந்து, துரந்துகொண்டு இகல்—அவுணர்களைத் துரத்திப் போர்புரிந்த, வென்றி வேல—வெற்றி பொருந்திய வேலாயுதத்தையுடையவரே! பரிமள மிக்க சிவந்த நின்கழல்—ஞான வாசனை மிகுதியாக வீசுவதும், சிவந்திருப்பதுமாகிய தேவரீருடைய திருவடியை, பழுது அற நல் சொல் தெரிந்து - குற்றமற நல்ல சொற்களைத் தெரிந்து, அன்பொடு பகர்வது அன்போடு துதிக்கின்ற தன்மையை, இனி சற்று உகந்து தந்திட - இனியாவது சிறிது விரும்பி தந்தருளுமாறு, வந்திடாயோ — வந்து காட்சிதரமாட்டீரா?

## பொழிப்புரை.

சிவபக்தி யறவே நீங்கி உறுதி குலைந்த திரிபுர வாசிகளையும் அவர் வாழ்ந்த முப்புரங்களையும் பொன் மேரு மலையை வில்லாகக்கொண்டு சிரித்து எரித்தவரும், என்றும் உள்ளவரும், வலிமை பொருந்திய திருக்கரத்தையுடையவரும், மகாலட்சுமி தேவியும், கச்சணிந்த தனபாரங்களையுடையவரும், கருணையுடன் தோன்றினவரும், திசைகளில் பொருந்தவந்து கரைகளுடன் அலைகளாற்பொருது ஞானக்கலைகளுடன் கலந்து நறுமலர்க்கொத்துடன் கூடி கம்பா நதி பெருகி வர, சிவலிங்கத்திருமேனிக்கு ஊறு வருமே என்று பயந்து தழுவி; இன்றவன் திருமேனியில்

ஒருபாதி கருநிறத்தையுடைய இடப்பாகம் பெற்றவரும், தாமரையொத்த தனது திருவடிகளை நினைந்து நெஞ்சம் நெகிழ்ந்து தியானிக்கும் அடியார்கட்கு கருணை மிகுந்து அயனரிபபதங்களைத் தந்து அருள்புரிபவரும் ஆகிய காமாட்சியம்மையாருடைய கோட்டமாகிய கச்சியம் பதியில் எழுந்தருளியுள்ள இந்திராதி இமையவர்கட்குத் தலைவரே! மல மூத்திரங்களை விடுகின்ற விசாலமான பெரிய குடிசையும், எல்லா வினைக்கூட்டங்களும தங்கி இருக்குமாறு சோற்றுக்கிடமாகி கண் மூக்கு முதலிய உறுப்புக்களுடன் செய்யப்பட்டு வந்ததும், தந்தையும் தாயும் பெறவந்ததும், பொய்க்குள் கிடந்த ஒன்பது ஓட்டைகளுடன் கூடியதுமாகிய இந்த உடம்புக்குள் உறையும் பிராணனைக் கூற்றுவன் துரத்திக்கொண்டுவந்து சுற்றத்தாரினின்றும் பிரித்து தனியில் இழுத்துக்கொண்டு போகும் பெரிய கலக்கமானது அடியேனுக்கு வருவதற்கு முன், பல நிறத்துடன் கூடி மண்ணும் விண்ணும் வெளியு மாறு நடந்து வலிய பாம்பின் படத்தின் மீது காலையூனறி வரும் மயில் மீது ஆரோகணித்து அவுணர்களைத் துரத்திக்கொண்டுபோய் போர்புரிந்து அழித்த வெற்றி வேலாயுதப்பெருமானே! ஞானவாசனை வீசுகின்ற சிவந்த தேவரீரது திருவடிகளை குற்றமற இனிய சொற்களைத் தெரிந்து அன்போடு பாடிப் பரவும தன்மையை இனி யாவது அடிமைக்குச் சிறிது விருப்பத்துடன் தந்து அருள் புரிய வரமாட்டீரோ?

## விரிவுரை.

**சலமலம் விட்ட.........குடில் :—**

உடம்பைப் பேணுவதையே பெருநோக்கமாகக் கொண்டு, அவலவயிற்றை வளர்ப்பதற்கு அல்லும் பகலும் பாடுபட்டு மக்கள் ஓயாது உழல்கின்றனர். உடம்புக்குள் உயிர்க்குயிராயுறையும் உத்தமனைக் காண்பதற்கு முயல் கின்றார்களில்லை. என்னே பேதமை! இவ்வுடம்பைப்

பார்த்துப் பார்த்து மகிழ்கின்றனரே? இது என்ன வாசனைப்பட்டங்கள் நிறைந்த வீடா? இல்லை, மலசல நிறைந்த குடிசை.

உடம்பின் அசுத்தத்தை நினைந்தாலொழிய உடம்பின் மீதுள்ள பற்று தொலையாது. "புன்புலால் யாக்கை" என்றார் மணிவாசகர்.

காகமொடு கழு கலகை நாய் நரிகள்
சுற்று சோறிடு துருத்தியைக்
காலிரண்டு நவ வாசல் பெற்று வளர்
காம வேள் நடன சாலையை
மோக ஆசைமுறி யிட்ட பெட்டியை மும்
மலமிகுந்தொழுகு கேணியை
மொய்த்துவெங் கிருமி தத்துகும்பியை
முடங் கலார் இடை சரக்கினை
மாக இந்த்ரதநு மின்னை யொத் திலக
வேதம் ஓதிய குலாலனூர்
வினைய வெய்ய தடிகாரனை யமன்
வந்தடிக்குமொரு மட்கலத்
தேகமானபொயை மெய் யெனக்கருதி
ஐய வைய மிசை வாடவோ
தெரிவதற் கரிய பிரம மே அமல
சிற்சு கோதய விலாசமே

என்று தாயுமானார் இவ்வுடம்பைப் பற்றி யருளிச்செய்யும் அழகையும் நோக்குக.

சசலவினைக் கோத்திருந்திடும்படி :—

வினை நல்வினை தீவினை என இரு வகைப்படும்; அது முற்பிறப்புக்களில் செய்து பக்குவத்திற்கு வராமல் இருப்பாக நிற்பதாகிய சஞ்சிதம், பக்குவப்பட்டு இப் பிறப்பில் அநுபவிப்பதாகிய பிராப்தம், இப்போது மன மொழி மெய்களால் புரிவதாகிய ஆகாமியம் என மூன்று பிரிவாக நிற்கின்றது. "வினைப்போகமே யொரு தேகங் கண்டாய் வினை தானொழிந்தால் தினைப்போதளவும்

நில்லாது" என்றார் பட்டினத்தடிகள் இத்தகைய வினைத் தொகுதிகள் இவ்வுடம்பில் தங்கியிருக்கின்றன. அதனால் உடல் இருக்கின்றது.

**பொய்க்குட் கிடந்த கந்தல் :—**

பொய் வாழ்க்கையுட் கட்டுண்டு கிடப்பது இவ்வுடம்பு; பிதாமாதாக்களின் குணானுகுணங்களிலிருந்து வந்தது. அவர்களது தன்மைகள் எஞ்சி மக்களாக இருப்பதனால் பிள்ளைகளுக்கு எச்சம் என்று பேருண்டாயிற்று. ஒரு பெரிய துணியிலிருந்து கிழித்து ஒரு துண்டை யெடுப்பதுபோல் தாய்தந்தைகளிடமிருந்து கிழிந்த கந்தல் இந்த உடம்பு. "மாலினால் எடுத்த கந்தல்" என்றார் பிறிதோரிடத்திலும். கந்தல் என்றால் ஓட்டைகளுடன் கூடியது. இவ்வுடம்பிலும் ஒன்பது ஓட்டை.

**சமன்துரந்து :—**

சமன் – இயமன்; எல்லோரையும் சமமாகப் பார்க்கின்றவனாதலின் இப் பேர் பெற்றனன். பழையவரென்று பாரான்; புதியவரென்றும் பாரான், தனவந்தர், ஏழை, மணமகன், பெரிய அதிகாரி, புலவன், வீராதி வீரன், அரசன், இளையவன், இனியாராக இருப்பினும் ஆயுள் முடிந்ததும் உயிரைப்பற்றுவன்; நடுநிலை தவறாதவன் ஆதலினால் "நடுவன்" என்ற பெயரையும் பெற்றனன். ஆயுள் முடிந்தவுடன் துரத்திக்கொண்டு வருவான். உயிருக்குப் பயந்து வயித்தியன் வீட்டிலேயே குடியிருந்தாலும் வருவான்.

**தனியிலிழக்கப் படுந்தரங்கம் :—**

பணியாளர்களும், தாய்தந்தையரும், மக்களும், உயிர்க்கினிய மனைவியும், சுற்றத்தாரும் நண்பரும் சூழ்ந்திருப்பினும், அத்தனைப்பேரிலின்றும், இன்னும் மிக உறவாக இருந்த இவ்வுடம்பினின்றும் பிரித்துத் தனித்துக்கொண்டு போவான்.

"பைவருங் கேளும் பதியுங் கதறப்பழகி நிற்கும்
ஐவருங் கைவிட்டு மெய்விடும்போதுன் அடைக்கலமே"
—அலங்காரம்

அத் தனிவழிக்குத் துணையாய் நின்று முருகன் கைவேல் உதவும்.

பல வுருவத்தை..........தந்திடாயோ :—

ஊழுத்த களத்தில் எம்பெருமான் மயின்மீதூர்ந்து அசுரரைத் துரத்தி யழித்தனர். அதனால் அடியேனை யமன் துரத்தும்போது காப்பாற்றவேணும் என்றும் குறிப்பிடுகின்றனர். இனிய சொற்களை யமைத்து இறைவன் திருவடித்தாமரைகளைத் துதித்து கவிபாடி வழிபடவேண்டும்.

"அம்புயப்பதங்களின் பெருமையைக் கவிபாடி"
—திருப்புகழ்.

சிவமயமற்றுத் திடங்குலைந்தவர் :—

கமலாட்சன் தாரகாட்சன் வித்யுன்மாலி என்ற மூன்றசுரர்களும் சிவபெருமானிடத்து அளவிலா வரங்களைப்பெற்று, பொன் வெள்ளி இரும்பு ஆகிய கோட்டைகளுடன் வாழ்ந்து மாலயனாதி வானவரை வருத்தலுற்றனர். தேவர்கள் சிவபெருமானிடம் வந்து திரிபுர அசுரரால் நேருந் துன்பத்தைக் கூறி முறையிட்டனர். "நமக்கு அன்பர் ஆதலின் நாம் அவரை யழிக்கமாட்டோம்" என்று ஆலமுண்ட நீலகண்டப்பெருமான் கூறியருளினார். திருமால் புத்தாவதாரங்கொண்டு திரிபுரர்கள் வாழும் ஊரில் புத்தக் கொள்கையை உபதேசித்து அந்நகரில் உள்ள எல்லோருடைய உள்ளத்திலும் இருந்த சிவ பக்தியை நீக்கிவிட்டனர். அவர்கள் திடங் குலைந்து மடங்கொண்டனர். ஆனால் மூன்று அவுணவேந்தர் மட்டும் அசையாத பக்தியுடன் விளங்கினார்கள். பிறகு தேவர் வேண்ட சிவபெருமான் மேருமலையை வில்லாகத் தாங்கி தேவர்கள் யாவரும் துணைசெய்யவந்தனர். தேவர்கள் நமது துணையினால் தானே பெருமான் திரிபுர

சங்காரஞ் செய்கின்றுர் என்று எண்ணி இறுமாந்தனர். எல்லாம் வல்ல இறைவன் "நமக்கொரு துணையும் வேண்டுங்கொலோ" என்று எண்ணி சிறிது சிரித்தனர். அம்முறுவலினின்றும் வெளிப்பட்ட ஒரு சிறு நெருப்புப் பொறியால் முப்புரமும் அதனுள் சிவமயமற்றுத் திடங் குலைந்த அவுணர்களும் சாம்பராயினர். அதற்குள்ளிருந்த மூவேந்தரும் அழியாது நின்றனர். என்னே இறைவன் பெருமை!

"மாநாக நாண் வலுப்புறத் துவக்கி யோர்
மாமேரு பூதரத் தநுப் பிடித்தொரு
மாலாய வாளியைத் தொடுத் தரக்கரில் ஒருமூவர்
மாளாது பாதகப் புரத்ரயத் தவர்
தூளாகவே முதல் சிரித்த வித்தகர்"

—திருப்புகழ்.

சிவபெருமானும் உமாதேவியாரும் பொன்னும் மணியும்போல் தாதான்மியமாதலால் திரிபுரதகனம் அம்பிகை புரிந்ததாகக் கூறுகின்றனர்.

திருமகள் :— இலக்குமிதேவியை யதிட்டித்து செல்வத்தைத் தருவது உமையம்மையார் என்பதைத் தெரிவிக்கின்றனர்.

நதிகோளகத்திற் பயந்து........இடத்திற் கலந்திருந்தவள் :—

உமாதேவியார் இடப்பாகம் பெறும் பொருட்டு கச்சியம்பதியில் மாமரத்தின் கீழ் மணலை இலிங்கமாகப் பிடித்து அன்புடன் வழிபாடு செய்தனர். அவரைச் சோதிக்கும் பொருட்டு பெருமான் கம்பநதியைப் பெருக வைத்தனர். பெருவெள்ளம் வர இலிங்கமூர்த்திக்குச் சேதம் வருமேஎன்று அம்பிகையஞ்சி இலிங்கத்தைத் தழுவிக்கொண்டனர். அதனால் இலிங்கத்தில் முலைச் சுவடும் வளைத்தழும்பும் உண்டாயிற்று. பெருமான் காட்சிதந்து இடப்பாகங் கொடுத்தருளினர். காஞ்சிப் புராணத்தில் விரிவாகப்பார்க்க.

ஓம் குஹாய நம:

# கந்தரலங்காரம்

(ருஅ-ம் பக்கத்தொடர்ச்சி.)

பாதித் திருவுருப் பச்சேன் றவர்க்குத்தன் பாவனையைப்
போதித்த நாதனைப் போர்வே லனைச்சென்று போற்றியுய்யச்
சோதித்த மெய்யன்பு போய்யோ அழுது தொழுதுருகிச்
சாதித்த புத்திவந் தெங்கே யெனக்கிங்ஙன் சந்தித்ததே. (கூ௲)

பதவுரை.

பாதி திருவுரு - தமது திருமேனியில் ஒரு பகுதி, பச்சென்றவர்க்கு - பச்சைநிறமாகவுடைய சிவபெருமானுக்கு, தன் பாவனையை - தனது தியான பாவனையை, போதித்த நாதனை - உபதேசித்த குருநாதனை, போர் வேலனை - போருக்குரிய வேலாயுதத்தையுடைய முருகக்கடவுளை, சென்று போற்றி உய்ய - அவர் சந்நிதியிற்போய் வணங்கி உய்வு பெற, சோதித்த மெய்யன்பு பொய்யோ - சோதனை செய்த உண்மையான அன்பு பொய்யாகுமோ? அழுது தொழுது உருகி - அழுது தொழுது உள்ளம் உருகி, சாதித்த புத்திவந்து - உறுதிசெய்த அறிவானதுவந்து, இங்கேஎனக்கு இங்ஙன் சந்தித்தது-இவ்விடத்திலே அடியேனுக்கு எந்தவிதமாக நேர்ந்தது.

## விரிவுரை.

பாதித்திருவுரு பச்சேன்றவர் :—

சிவபெருமான் திருவுருவிற் பாதி உமையம்மையாருடையது. மாதொரு கூறன்: வலப்பாகஞ் செம்பவளச்சோதியாகவும் இடப்பாகம் எழில்மிகு மரகதச்சோதியாகவும் உன்னுந்தொறும் உள்ளத்தை உருக்கி உவட்டாத உவகையைத்தரும் உருவமன்றோ எந்தைபிரான் எழிலுருவம்?

---

கருத்துரை.

சத்திவீடாகிய காஞ்சீபுரத்தில் வாழுங் கந்தவேளே! இயமன் வந்து உயிரைப்பற்றுமுன் உமது திருவடியைப்பாடியுய்யும் வரத்தைத் தந்தருள வந்தருளுவீர்.

"குவளைக்கண்ணி கூறன் காண்க
அவளுந்தானு முடனே காண்க."

அக்கினி நன்கு கொழுந்துவிட்டெரியும்போது அன்பர்கள் கூர்ந்து நோக்குக. அவ் வனற்கொழுந்தின் நுனியில் பச்சைவர்ணம் பளபளவென்று மின்னி எழில்தர இலங்கும். அக் காட்சி இறைவன் திருவுருவை நினைவூட்டும்.

தன்பாவனையை போதித்த நாதன் :—

சிவபெருமானுக்கு செவ்வேட்பரமன், தனது பாவனையாகிய ஓம் என்ற பிரணவத்தை உபதேசித்தனர். தன் பாவனையானது பிரணவமந்திரம். அதன் உட்பொருள் முருகவேளேயாவர்.

"நாலந்த வேதத்தின் பொருளோனே
நானென்று மார்தட்டும் பெருமாளே"

அதனால் அவருக்கு "சிவகுருநாதன்" என்ற திருநாமம் உண்டாயிற்று.

"அரிபிரமருக்கு முதலரியபரமர்க்குயரும்
அருமறை முடிப்பையுப தேசித்த தேசிகனும்"
—வகுப்பு.

போர் வேலன் :—

வெல் என்ற முதனிலை நீண்டு வேல் என்று தொழிற் பெயராயிற்று. எல்லாவற்றையும் வெல்லுவது அறிவேயாதலின் வேல் என்பது அறிவு (ஞானம்) ஆகும். "ஞானபூரண சத்தி தரித்தருள் பெருமாளே" என்றார் அருணகிரிநாதர்.

அறிவின்தன்மை அஞ்சாமையாகும்; அஞ்சாமையாவது வீரம்; மற்றும் அறிவின்தன்மை கூர்மை; பலவகையான வில்லங்களினின்று விடுதலையடையச் செய்வதும் அறிவேயாம். ஆழ்ந்திருப்பதும் வெற்றியைத் தருவதும் ஆணவமலத்தையும் வினைத்தொகுதியையும் அறவே யழிப்பதும் அறிவேயாம். இதனையே நக்கீரர் வகைப்படுத்திக் கூறுகின்றார்.

வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல்—வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்புங் குன்றுந்
தொளைத்தவேல் உண்டே துணை.

காமம் குரோதம் லோபம் மோஹம் முதலிய துர்க்குணங்களுடன் போராடுவதும் அறிவேயாதலின் வேலைப் போர்வேல் என்றருளிச்செய்தார்.

அறிவு குறுகியிருத்தலாகாது; நீண்டிருத்தல் வேண்டும்; ஆதலினால்தான் வேல் நீண்டிருக்கின்றது. "நெடுவேல்" என்று பாராட்டுவதைக் காண்க. அவ்வேலை பூசிப்பதாலும், உடம்பில் அணிவதாலும், பாடுவதாலும், பணிவதாலும் அறியாமையை வென்று அறிவு நிரம்பப் பெற்று இன்புறலாம்.

**சென்றுபோற்றியுய்ய சோதித்த மெய்யன்பு போய்யோ :—**

"முருகவேளுடைய திருமுன் சென்று போற்றி செய்து உய்வு பெற ஆய்ந்துவந்தடைந்த உண்மையான அன்பு பொய்யாகுமோ? ஆகமாட்டாது" என்றார். அது உண்மையான அன்பு என்பதற்கு சான்றுகள் கீழே கூறுமாறு காண்க.

**அழுது தொழுது உருகி :—**

> "அன்புக்கு முண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
> புன்கணீர் பூசல் தரும்"

என்ற பொய்யாமொழிப்படி அன்பு அதிகமுற்றதற்கு அடையாளம் கண்ணீர் வருவது. அழுதால் ஆண்டவனையடையலாம். "அழுதாலுன்னைப் பெறலாமே" என்றார் மணிவாசகர்.

அடியார்களின் ஆனந்தக் கண்ணீரில் ஆண்டவனுடைய திருவடி முழுகிக்கொண்டிருக்கின்றது; அவ்வன்புக்கண்ணீரே அவருக்கு மிக்க உவப்பைத் தருகின்றது.

> "முருக சரவண மகளிர் அறுவர் முலை நுகரு மறு
> முககுமர சரணமென அருள்பாடியாடி மிக
> மொழிகுழற அழுது தொழு துருகுமவர் விழியருவி
> முழுகுவதும் வருகவென அறைகூவி யாளுவதும்"
>
> —வகுப்பு.

> "உருகுமடியவர் இருவினை யிருள்பொரும்
> உதய தின கர"

[library stamp]

என்ற அருமைத்திருவாக்கால் உள்ளம் உருகுகின்றவர்களின் உள்ளத்தில் இறைவன் திருவடியாகிய தாமரை மலரும். கல்லின்மேல் தாமரைப் பூ மலராது. அதுபோல் கல்மனத்தில் இறைவன் தாமரை மலராது. ஆனபடியால் கெட்டியாக உள்ள கல்போன்ற உள்ளத்தை உருகச் செய்தால் பெருமானுடைய பாதகமலம் மலர அதனால் பெரும்பயனையடையலாம்.

> " திணியான மனோசிலை மீதுனதாள்
> அணியா ரரவிந்த மரும்பு மதோ "

அருணகிரிநாத சுவாமிகள் அநுபூதியில் "அருட்குணங்கள் எட்டனையுமுடையவரே! மோனரும் வானவரும் பணியும் குருநாதா! அடியேனுக்கு உலகில் வேறு ஒன்றும் வேண்டா; முருகா! குமார! குகா! என்று கூறி உள்ளம் உருகும் செயலைத் தந்து உணர்ச்சியைத் தந்தருள்வீர்" என்று வேண்டுகின்றார்.

> முருகன் குமரன் குகனென்று மொழிந்
> துருகுஞ் செயறந் துணர்வென் றருள்வாய்
> பொருபுங் கவரும் புவியும் பரவுங்
> குருபுங் கவவெண் குணபஞ் சரனே.

" புத்திவந் தெங்கே எனக்கிங்ஙன் சந்தித்ததே "

" இத்தகைய அன்புருவமாகிய அறிவு எங்கே எப்படியோ எனக்குக் கிடைத்தது" என்று வியப்புறுகின்றார்.

### கருத்துரை.

சிவகுருநாதனாகிய வேலாயுதக்கடவுளை அடியேன் போய் வழிபட்ட அன்பு பொய்யன்று; பண்டைசெய்த நல்வினைப் பயனால் கிடைத்தது.

உ

முருகா

# கற்பு.

**வைத்தியர்** :— சிவராமனைப் பார்த்து "ஐயா! தங்கள் மனைவியாரை நம்பவேண்டாம். அவருக்கு விருப்பமானதைக் கொடுங்கள். அந்த அம்மையார் ஆயுள் முடிந்துவிட்டது" என்று சொல்லிப்போயினர். அதனைக் கேட்ட சிவராமன் இடியேறுண்ட நாகம்போல் நடுங்கி "அந்தோ! என்னுடைய இன்ப மாளிகை இடிந்துவிட்டது. பொறுமையின் பொக்கிஷமாகிய எனது மனைவியைப் பிரிந்து நான் எப்படி வாழ்வேன்? ஒருவருடக் குழந்தையாகிய எனது அருமந்தப் புதல்வி நீலவேணியை நான் எப்படிக் காப்பாற்றுவேன்? ஆறுமுகத் தரசே! ஐயனே! உனது திருவிளையாடல் எப்படியோ? அப்படி நடக்கட்டும். கருணைக்கடலே! "நன்றே செய்வாய் தீதே செய்வாய் நானோ இதற்கு நாயகமே" எல்லாம் உன் திருவருள்போல் நடக்கட்டும்" என்று தனக்குள் கூறி துன்பக்கடலில் மூழ்கினன்.

படுக்கையில் கிடந்த அவனுடைய மனைவி பேசுவதற்கு முடியாதவளாய் கணவனைக் குறிடபினல் அழைத்து தன் அருகிருத்தி தன் மகள் நீலவேணியின் கரத்தை கணவன் கரத்தில் வைத்து கண்ணீர் விட்டு "முருகா" என்று கண்களை மூடினள். அவளுடைய உயிர்ப்பு அடங்கிவிட்டது. மரண யாத்திரை சென்ற மனைவியைக்கண்டு சிவராமன் உள்ளம் துடித்து. கரையில்லாத கவலையில் ஆழ்ந்தனன். குழந்தை, "அம்மா! அம்மா" என்று கதறத் தொடங்கிற்று. குழந்தையின் அழுகையைக் கண்டு உற்றாரும் மற்றாரும் அழுதனர். சிவராமன் ஒருவாறு மனந்தேறி மனைவியைக்கொண்டுபோய் சமவிறகேற்றி தகனக்கிரியை செய்தான்.

"மாதரசே கற்பின் மணியே மணிவிளக்கே
சீதமலர் வாழும் திருவே தினந்தோறும்
ஆதரவு நல்கியவென் ஆரணங்கே அன்புடைய
காதலியெங் குற்றாய் கங்குலினும் கண்ணுறங்கேன்"

என்று தன் மனைவியை நினைந்து நினைந்து நெஞ்சம் புண்ணுகி குழந்தை நீலவேணியைக் கண்போல் காப்பாற்றி வந்தனன்.

மூன்று ஆண்டுகள் கழிந்தன. நெருங்கிய உறவினரும், நண்பரும் அவனை மறுமணம் புரிந்துகொள்ளுமாறு வற்புறுத்திக் கூறினார்கள். சிவராமன் மறு தாரத்தால் தனது செல்வக் குழந்தை சீரழியுமென்று இணங்காதிருந்தனன். பின்னர் விதியின் செயலாலும், மறு மணம் செய்துகொள்ள வற்புறுத்திக்கூறுவார் மதியின் இயலாலும் துர்க்காதேவி என்ற பெண்ணை இரண்டாவது மனைவியாக சிவராமன் மணந்துகொண்டான். துர்க்காதேவி கணவன் வீட்டிற்கு வந்தவுடன் தன் சக்களத்தியின் குழந்தை நீலவேணியைக் கண்டாள். அக்குழந்தையின் அழகும், ஒளியும் அவள் மனத்தில் மகிழ்ச்சியை உண்டாக்கவில்லை. பொறாமைத் தீ பொங்கிஎழுந்து கனன்றது. காளகூட விஷத்தைக் காண்பது போல் கண்டாள். சிவராமன் கூடுமானவரை நீலவேணியைக் கண்காணித்து வந்தான். அவன் இல்லாத வேளைகளில் குழந்தை அழுதால் துர்க்கை முதுகில் மொத்துவாள். தலைமயிரைப் பிடித்து ஆட்டி "ஏன் இப்படி நீலிவேஷம் போட்டு அழுகின்றாய்? உன்னை யார் அடித்தார்கள்? வாயை மூடு" என்று இடி இடித்தாற்போல் சீறி விழுவாள். குழந்தை வலி தாங்காமல் கதறி அழுதால் துர்க்கை மேலும் கோபித்து கந்தல் துணியை வாயில் திணிப்பாள். அந்தக்குழந்தைக்கு சிறுவயதிலேயே வேதனை உண்டாயிற்று. செக்கில் அகப்பட்ட எள்ளைப்போல் குழந்தை நீலவேணி துர்க்கையின் கைக்குள் அகப்பட்டு கலக்கமுற்றது. அடிக்கும் உதைக்கும் நடுவில் நீலவேணிக்கு ஐந்து வயது நிரம்பியது. சிவராமன் மகளைப் பள்ளியில் வைத்தான். இதற்கிடையில் துர்க்கை கருக்கொண்டு தன்னைப்போலவே கருநாகக் குட்டியைப்போல் ஒரு பெண் குழந்தையைப் பெற்றாள். அக்குழந்தைக்கு அழகுசுந்தரி என்று பெயரிட்டு அருமையிலும் அருமையாக வளர்த்து வந்தாள். நீலவேணி அழகின் கொழுந்து போல் விளங்கினாள். தங்க விக்கிரகம் போன்ற அவளைப் பார்த்தவர்கள் கரிக்கட்டைபோன்ற அழகுசுந்தரியைப் பார்த்து சிரிப்பார்கள். அதைக்கண்டு துர்க்கை மனம் புழுங்குவாள். நீலவேணி பள்ளிக்குப் போகப் புறப்பட்டால் துர்க்கை அவள் கன்னத்தில் ஒரு அறை அறைந்து "அடுப்பூதும் பெண்ணுக்கு படிப்பு ஒரு கேடா?" என்று வீட்டிலுள்ள வேலைகளை அளவுக்கு மீறி இடுவாள். எல்லா வேலைகளையும் செய்துவிட்டு துர்க்கை தூங்கும் நேரங்களில் நீலவேணி கல்வி பயின்று வருவாள். அவளுக்கு வயது ஏற ஏற துர்க்கைக்குப் பொறாமையும், போராட்டமும் ஏறிக்கொண்டேவந்தன. விடியற்காலம் 3 மணிக்கே நீலவேணியை எழுப்பி சாணி தெளித்தல்,

பாததிரங்களை விளக்குதல் வீடுவாசல்களைக்கூட்டி மெழுகுதல், மாட்டுத் தொழுவத்தைச் சுத்தம் செய்தல், தண்ணீர் எடுத்தல், சமைத்தல், எருமுட்டை தட்டுதல், சீலை தோய்த்தல், நெல் குத்துதல், மாவு அரைத்தல், துர்க்கைக்கு கால் அமுத்துதல், அழகு சுந்தரிக்கு உடம்புபிடித்துவிடுதல், எண்ணை தேய்த்தல், அரைப்பு தேய்த்தல், உணவு படைத்தல், ஆகிய எல்லாவேலைகளையும் பம்பரம்போல் சுழன்று நீலவேணி சிற்றன்னைக்குப் பயந்துசெய்துவந்தாள். சற்று அயர்ந்து நின்றால் அடியும் உதையும் நூற்றுக்கணக்காகக் கிடைக்கும். என் செயவாள் பாவம்! தன் விதியையும் வினையின் கதியையும் நினைந்து அழுவாள். சிவராமன் தன மகள் படும் வேதனையை ஒருசிறிது அறிந்தும் துர்க்காதேவி என்னும சண்டமாருதத்தின் முன் சிறு துரும்புபோல் ஆனான்.

துர்க்கை நாள்தோறும் அண்டை அயல்களில் போய் "நீலவேணி பெரிய தீனிக்காரியென்றும், சமைப்பதில் பாதிக்கு மேல் திருடித் தின்கிறாள் என்றும், ஓயாமல் தூங்கி வழிகின்றாள் என்றும், பொய்யின் பொக்கிஷமென்றும், துர்க்குணக குவியல் என்றும்" தூற்றுவாள். தன் மகள் பரம பாக்கியசாலியென்றும், அறிவில் பெரியவளென்றும் அரசனை மணந்துகொள்ளக்கூடிய அதிருஷ்டசாலியென்றும் வாய்ப்பறை சாற்றுவாள். நீலவேணியினுடைய தலை தீபாவளியன்றுதான் சிறிது எண்ணையைப் பார்க்கும். நாள்தோறும் மாலை 3 மணிக்கு அரை வயிறு பழையதும் இரவு 11 மணிக்கு கால் வயிறு ஆறிய சோறுந்தான் ஆகாரம். அழகுசுந்தரி கட்டிக்கிழித்த கந்தல்தான் அவளுக்கு ஆடை; இரவு 12 மணி முதல் 3 மணிவரைதான் நித்திரை. ஒருநாள் நீலவேணி பழையது உண்ணும்போது ஒருபச்சைமிளகாய் எடுத்து தின்றுவிட்டாள். அதனை அழகுசுந்தரி கண்டு அவள் தாயிடம் போய் "அம்மா! நீலா பச்சைமிளகாய் முழுவதும் தின்கின்றாள்" என்று கூறினாள். உடனே துர்க்கைக்கு பச்சைமிளகாய்போல் கடுப்பும் காரமும் ஆங்காரமும் உண்டாகி, ஆங்கொரு மூலையில் கிடந்த தடிமுறிய நீலவேணியை அடித்தாள்.

நீலவேணி உடல்முழுவதும் உதிரம் குழம்பி சிவந்துவிட்டது. "முருகா! மூவர் முதல்வா! ஏ கருணா நிதி! பன்னிரு கண்ணுடைப் பரமனே! இனி இந்த வேதனையை என்னால் படமுடியாது; எத்தனை நாள் இத் துன்பத்தில் நான் வெதும்புவேன்; சுகமென்பது அணுவளவும் நான் கண்டதில்லை. பிறந்தநாள்தொட்டு பெருந்துயரமே. தாயில்லையானால் பேய்போல் அலையவேண்டியது தான்போலும். கருணைக்கடலே! என் கவலையை ஒழித்துக்

காப்பாற்றுவாய்" என்று புலம்பினாள். இங்ஙனம் நாள்தோறும் அடியும் உதையும் உடன்பிறப்பாக அவளைவிட்டுப் பிரியாமல் இருந்தன இந்த நிலையில் மங்கைப்பருவமடைந்தாள்; யாதொரு சடங்குமின்றி வீட்டிற்கு அழைக்கப்பட்டாள். சிவராமனுக்கு இருந்த பல தொல்லைகளும் வேலைகளும் நீலவேணியைக் கவனிக்கவிடவில்லை. இளையவளாகிய அழகுசுந்தரியும் இரண்டொரு ஆண்டுகட்குப்பின் மங்கைப்பருவமடைந்தாள். 1000-ம் ரூபாய் செலவழித்து மேளம் தாளம் விருந்து முதலிய சிறப்புகளுடன் வீட்டிற்கு அழைக்கப்பட்டாள். ஒரு கரிக்கட்டைக்கு அலங்காரம் பண்ணினதுபோல் அழகுசுந்தரி நல்ல ஆடையாபரணங்களால் அலங்கிருதையாக இருந்தனள். நீலவேணியின் மீது ஒரு நகையும் இல்லை. அவளுடைய இயற்கையான அழகை நகைபோட்டு மறைக்கக்கூடாதென்று தெய்வ சம்மதம் போலும். ஆனால் அவள் நகையின்றியே உருக்கிவார்த்த ஆயிரமாற்றுத் தங்க விக்கிரகம்போல் விளங்கினாள்.

சிவராமன் வாழும் அரசங்குடிக்கு 60 மைல் தொலைவில் கமலப்புத்தூர் என்ற ஊரில் ஒரு பெரிய தனவந்தர். "அரிராம்" என்றால் அழுதபிள்ளை வாய் மூடும்; கோடீசுரர். அவருக்கு ஒரே ஒரு மகன். அரிகரன் என்பது அவனுடைய பேர். நல்ல அழகும் அறிவும் உடையவன். அரிராம் தன் மகன் அரிகரனுக்கு திருமணஞ்செய்ய நினைத்தனர். அரசங்குடி சிவராமனிடம் பெண்கள் இருப்பதாகக் கேள்விப்பட்டார். சிவராமன் குலம் குணம் முதலியவைகளில் சிறந்திருந்தானாதலின் அவனுடைய சம்பந்தத்தை விரும்பினார். தன் குலத்துப் பெரியார்களைப் பெண் கேட்டு முடிவு செய்யுமாறு அனுப்பினார். வந்தவர்களை சிவராமன் நன்கு உபசரித்தான்; வந்தவர்கள் "அரிராம் அவர்களின் புதல்வன் அரிகரனுக்கு தங்கள் புதல்வியைத் தரவேண்டும்" என்றார்கள். சிவராமன் மெத்த மகிழ்ச்சியுடன் சம்மதித்தான். அரிராம் மிகப்பெரிய செல்வந்தர் ஆதலின் அவருடைய சம்பந்தம் தனக்கு கிடைப்பது குறித்து பெரிதும் மகிழ்ந்தான். வந்தவர்கள் இருபெண்கள் இருப்பதாகத் தெரிந்து இருவரையுங் காண விரும்பினார்கள். துர்க்கைத் தன் மகளை நன்கு அலங்கரித்தும், நீலவேணியை ஒரு பழம் புடவையுடனும் காட்டினள். அதுசமயம் சிவராமன் ஏதோ வேலையாக மேல்மாடிக்குப் போனான். துர்க்கை வந்தவர்களைப் பார்த்து, நீலவேணியைக் காட்டி "இவளுக்கு உடம்பு சரியில்லை

இவள் ஜாதகத்தில் எட்டாமிடமும் சரியில்லை ; மாங்கல்ய தோஷ மிருக்கின்றது" என்று கூறினாள். நீலவேணி கண்களில் முத்து முத்தாக நீர்த் துளிகள் சிந்தின. வந்தவர்களுக்கு நீலவேணியை முடிக்க வேண்டுமென்று தோன்றினாலும் துர்க்கையின் பசப்பு வார்த்தைகளால் மயங்கி அழகுசுந்தரியை மணந்து கொள்வதாகத் தீர்மானித்தார்கள். சிவராமன் துர்க்கையிடம் தனித்துப்போய் "ஆமாம்; வந்திருக்கின்றவர்கள் பெரிய மனிதர்கள் ; அரிராம் அவர்கள் சிறந்த சீமான்; அவருடைய சம்பந்தம் நமக்குக் கிடைப்பது அரிது. அவர்கள் இளையவளைக் கேட்கின்றார்களே. மூத்தவளிருக்க இளையவளுக்கு எப்படி விவாகஞ் செய்வது?" என்று கூறினான். துர்க்கை, "தாங்கள் ஒன்றும் அதுபற்றி சிந்திக்கவேண்டாம்; அழகுசுந்தரி கல்யாணம் ஆகட்டும். மற்றது பின்னாடி பார்த்துக்கொள்வோம்" என்றாள். நாள் பார்த்து பின்னர் எழுதியனுப்புவதாகச் சிவராமன் கூற வந்தவர்கள் அரிராம் அவர்களிடம் போய் சிவராமன் பெண்தர இசைந்ததாகக் கூறினார். அரிராம் மகிழ்ந்தார் ; பின்னர் சிவராமன் ஆனி 16ம் தேதி முகூர்த்தம் என்று ஜோதிட நூல் வல்லாரைக்கொண்டு நிச்சயித்தான்.

திருவாளர் அரிராம் அவர்கட்கு வந்தனம். நலம்.

பார்த்திப ஆண்டு ஆனித்திங்கள் 16ம் நாள் முகூர்த்தம் என்று தீர்மானித்திருக்கின்றோம்; 15ம் நாள் தாங்கள் மணமகனோடு வந்துசேருமாறு வேண்டுகிறோம். மற்ற ஏற்பாடுகள் யாவும் இங்கு நடக்கும்.

இப்படிக்கு,

சிவராம்.

என்று ஓலையெழுதி ஒரு ஆள் மூலம் அனுப்பினான். அரசங்குடிக்கும் கமலப்புத்தூருக்கும் இடையில் 60 மைல் ; சில இடங்களில் அடர்ந்த காடு. அக்காட்டுக்குள் ஒரு கள்ளக் கூட்டம் உண்டு. கள்ளர் தலைவன் பேர் வீரப்புலி. அவன் மிகத் தந்திரசாலி. அநேக இடங்களில் அநேகவிதமான தந்திரங்கள் செய்து கொள்ளையாடினவன் ; சமர்த்தன். அவன் இந்த ஓலை கொண்டு செல்பவனைப்பார்த்து தந்திரமாயழைத்து "என்னப்பா ஓலை யென்றான். அவன் ஓலையைத் தந்தான். வீரப்புலி அதைப் பார்த்து தனக்குள் ஒரு சூழ்ச்சியை ஆராய்ந்து முடிவுசெய்து கொண்டான். ஓலை கொண்டுவந்தவனை உபசரித்து அவனை ஒருபுறம் போகச்செய்து அந்த ஓலையில் ஆனி என்பதற்கு நடுவில்

வ என்ற எழுத்திட்டு னி என்பதை ணி என்று மாற்றி ஆவணி 16ம் தேதி என்று ஆக்கிவிட்டான். பின்னர் ஓலையை அவன் கொண்டுபோய் அரிராமிடந் தந்தான். அரிராம் சரி என்று கூறி

வந்தனம். நலம்.

தாங்கள் எழுதிய நாளில் நாங்கள் தயார்; குறித்த நாளில் மணமகனோடு வந்துசேருகின்றோம்.

இங்ஙனம்,

அரிராம்.

என்று பதில் எழுதியனுப்பினார். சிவராம் அதுகண்டு சரி என்றார். அரசங்குடியில் ஆனி 16 தேதி முகூர்த்தம் என்று அதற்குரிய ஏற்பாடுகள் பலமாக நடந்துகொண்டிருந்தது. நீலவேணிக்கு இயற்கையாகவே கூந்தல் நீண்டு சுருண்டு அடர்ந்து கருமேகம்போல் இருக்கும். அழகுசுந்தரிக்கு ஒட்டை சாண் அளவில் ஆங்காங்கு புழு அரித்து கூந்தல் அழகின்றி யிருந்தது. துர்க்கைக்கு அது மனத்திற்கு மிக்க வருத்தத்தையளித்தது. மகள் கூந்தல் திருமணத்துக்குள் வளர்ந்துவிடவேண்டுமென்று ஏதோ ஒரு தைலம் வாங்கி அழகுசுந்தரி தலைக்கு 2, 3 நாள் தடவினாள். அதனால் இருக்கின்றமயிருங்கூண்டோடு உதிர்ந்துவிட்டது. துர்க்கையும் அவள் மகளும் மனம் மிகவும் வருந்தினார்கள். கமலப்புத்தூரில் ஆவணி 16 தேதி முகூர்த்தமென்று அதற்குரிய ஏற்பாடு நடந்துகொண்டிருந்தது.

காட்டில் வீரப்புலியும் ஒரு ஏற்பாடு செய்துகொண்டிருந்தான். ஆனி 15 தேதி வந்தது. வீரப்புலி மாப்பிள்ளையாக அலங்காரஞ்செய்துகொண்டான். அவன் அதுவரை களவு செய்து சேமித்து வைத்த ஆடை ஆபரணங்களையெல்லாம் அணிந்துகொண்டு மிகத் தனவந்தர் மகனைப்போல் புறப்பட்டான். அவனைச்சேர்ந்த கள்ளர்கள் அரிராம் அவர்களைப் போலவும், அவரைச்சேர்ந்தவர்களைப்போலவும் சிலர் பெண்களைப்போலவும் உருவமெடுத்து ஆடம்பரமாக வந்து சேர்ந்தார்கள். முன்னரேயே ஒருவன் ஓடிவந்து சிவராமனிடம் பிள்ளை வீட்டுக்காரர் வருகின்றார் என்று கூறினன். சிவராமன் அரிராம் அவர்களை நேரில் கண்டதில்லை; கேள்விமட்டுந்தான். அதனால்கள்ளர்கூட்டத்தைப் பிள்ளைவீட்டுக்காரரென்றெண்ணி அளவுக்டந்த உபசாரஞ் செய்தான். பின்னர் மறுநாள் வீரப்புலியென்ற கள்ளர் தலைவனுக்கும் அழகுசுந்தரிக்கும் திருமணம் நிகழ்ந்தது. விருந்து ஆடல் பாடல் யாவும் சிறப்பாக நடந்தது. மூன்றும் நாள் சாந்தி முகூர்த்தமும் நடந்தது. வீரப்புலி அந்த

மூன்று நாளுக்குள் வீட்டில் பணம் வைத்திருக்குமிடம் மற்ற உளவுகள் முழுவதையுந் தெரிந்துகொண்டான். துர்க்கை தன் மகள் குபேர சம்பத்துக்கு அரசியானாள் என்றும் கோடீசுரன் மகனுக்கு மனைவியானாள் என்றுங் கரைகடந்த களிப்புற்றனள். சாந்திக்கல்யாணத்தன்றிரவு எல்லோரும் நன்றாக உறங்கி விட்டனர். 3 நாளாக அலைந்த அலைச்சலின் அயர்ச்சி; ஆழ்ந்த தூக்கம். வீரப்புலி பெண்ணின்மீதுள்ள நகைகளைக்கழற்றிக் கொண்டு பணப்பெட்டியையுந் தூக்கிக்கொண்டு தனது கூட்டத்துடன் இரவே கம்பிநீட்டிவிட்டான். விடிந்து அவ்வீடு அல்லோலகல்லோலப்பட்டது; மோசம்போனதாகத் தெரிந்தது. துர்க்கையும் அவள் மகளும் துக்கங்கொண்டாடினார்கள்.

ஊரெங்கும் இதேபேச்சு. சிலர் துர்க்கையின் துர்க்குணத்திற்கு ஏற்ற தண்டனை கிடைத்தது என்றார். சிலர், கள்ளனுக்கு மனைவியான அழகுசுந்தரியைக்கண்டு பரிகசித்தனர்: சிலர் தாயில்லாத குணவல்லி நீலாம்பிகையைச் செய்த கொடுமையே அவர்கட்குப் பேரிடியாக விழுந்தது என்றார் கரிக்கட்டையைப்போன்றவளுக்கு அழகுசுந்தரி என்றபேர் மிகப்பொருத்தம்; அடடா! கடவுள் தகுந்த சிட்சை செய்தார். வேண்டும் வேண்டும் இன்னும் வேண்டும். தாடகையும் சூர்ப்பநகையும் சேர்ந்தால் போல தாயும் மகளும் சேர்ந்து செய்த கொடுமையை கடவுள் பொறுப்பாரா? என்றார் சிலர்.

சிவராமன் தனக்கு நேர்ந்த அவமானத்தை நினைந்து நினைந்து நெஞ்சம் புண்ணாயினான். பின்னர் ஆவணி 16 தேதி முகூர்த்தத்திற்கு 15 தேதியே தாங்கள் வருவதாக அரிராம் கடிதம் எழுதியனுப்பினார். அதனைச் சிவராமன் கண்டு ஒன்றும்புரியாது நின்றான். தனது மூத்த மனைவியின் மகள் நீலாம்பிகையை விட்டு இளையவளுக்கு மணஞ்செய்ய நினைந்ததே இத்தனை தீமைக்கும் காரணம் என்று எண்ணினான். அரிராம் அவர்களின் மகனுக்கு நீலாம்பிகையைத் தருவதாகத் தீர்மானித்தான். துர்க்கை தன் வினையே தன்னைக்கெடுத்ததென்றுணர்ந்து துன்பக்கடலில் மூழ்கினாள். தன் தங்கைக்கு வந்த இடரை எண்ணி நீலாம்பிகை வருந்தினாள்.

குறித்த நாளில் அரிராம் அவர்கள் பந்துமித்திரர்களுடன் வந்தார். மிகவும் சிறப்பாக அரிராம் புதல்வனுக்கும் நீலாம்பிகைக்குந் திருமணம் இனிது நிகழ்ந்தது. நீலாம்பிகையின் நற்குணம் அவருக்கு நன்மையே யுண்டாயிற்று. குபேரசம்பத்

# உள்ளங் கவர் கள்வன்.

(வே. ஆ. தணிகாசலம், கண்டாச்சிபுரம்.)

(௭௰ வது பக்கத் தொடர்ச்சி)

நம் உயிரினுள் உணர்வாயிருக்கின்ற கடவுளை நினையா திருக்கின்றோம். ஆனால் எதை மறவாதிருக்கின்றோம். மீண்டும் பிறவிக்குக்காரணமாகிய இவ்வுலக வாழ்க்கையை மறவாதிருக்கின்றோம். நம் அறியாமை இருந்தவா றென்னே. நாம் அவரை மறந்தாலும் அவர் நம்மை பிரியாதபட்சம் மறவாதே என அறிவிக்கிறார். இது காட்டும் உதவி என்று கூறப்படும். இதைக் காரைக்கா லம்மையார் அற்புதத் திருவந்தாதியில் 20-வது பாட்டில் "அறிவிப்பான்றானே" அறிவா எனக் காட்டு முதவியை யும், "அறிவான்றானே" எனக்காணு முதவியையும் கூறியது காண்க. உயிர்கள் அவன் காட்டத்தாங்கணுமே யன்றி தாமே காண இயலா. நாம் அறியாதவாறு நம்முள் வந்து நல்லன இவை தீயன இவை என்பதை உள்ளிருந்து உணர்த்துகிறார். கருணைக்கடலாகிய இரக்கமே உரு வினனாகிய ஆண்டவனை நாம் நினைக்கவேண்டும். உள்ளே யிருக்கின்றான் என்று முன்னே கண்டோம். அவனை

---

தில் இன்பத்தின் எல்லையை நீலாம்பிகையடைந்தாள். அவளுடைய துன்பமுழுவதும் அடியோடுநீங்கிவிட்டது. பல பணிப்பெண்கள் சூழ்ந்து ஏவல் செய்யவும், அறுசுவையுண்டி ஆரத்துய்த்தும், மன்மதனனைய மணவாளன் மகிழ்ந்து இன்பத்தை நல்கவும் இந்திராணிபோல் விளங்கினாள். சிவராமன் தன் மகளுக்கு எய்திய பெருவாழ்வைக்கண்டு பெரிதும் மகிழ்ந்தான். துர்க்கையும் அவள் மகளும் கரைகாணாத கவலைக்கடலில் ஆழ்ந்து கவன்றனர். ஆனால் நீலாம்பிகை தன் சிற்றன்னை செய்த கொடுமைகளை ஒருசிறிதும் பொருள்படுத்தாமல் அவளுக்கு மிக்க ஆறுதலைச்செய்து அவளிடம் அன்பு பாராட்டினாள். முருகனருளால் நீலாம்பிகை நெடுநாள் இன்புற்று வாழ்ந்தனள்.

வெளியிலும் காணவேண்டும். ஆண்டவன் அறிய முடியாதவன் என்றாலும் அடைய முடிந்தவன். அவனை அடைவது மிகவும் சுலபம். எப்படி? என்ற வினா தோன்றுதல் இயற்கை.

"நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்"
நினைத்தார் சித்தத் துறைவோனே —அப்பர்.
"அழுதால் உன்னைப் பெறலாமே" —மணிவாசகர்.

என்ற நம் சமயாசாரிகள் வாக்குகள் நமக்குத் துணையாயுள்ளவை. கடவுளை மன மொழி மெய்களால் முறையே நினைந்தும் பாடியும் வழிபடுதல் வேண்டும். அவனை நினைந்து காதல் கொள்தல் வேண்டும். நெருப்பில் உருகுகின்ற வெண்ணெய்க்கு உருகுகின்றோம் என்ற எண்ணம் எப்படி யில்லையோ அதுபோல உருகவேண்டும். அவன் அருட்பண்புகளை வாயாரப்பாடுதல் வேண்டும். திருத்தொண்டு செய்யவேண்டும், அழவேண்டும். அழுத பிள்ளையை பாராத தாயுண்டோ? தந்தையுண்டோ? இல்லை இல்லை. அழுதால் ஆண்டவன் அம்மை அப்பனாக காட்சித்தருவன். இதற்கு விடாமுயற்சி வேண்டப் படும். முயற்சி திருவினை ஆக்கும் என்பது பொய்யா மொழி. இம்முயற்சியில் மனம் உரம் பெற்றதாக இருக்கவேண்டும். இதைத் திருவள்ளுவர் ஒரு பயனை அடைய அவாவுகின்றனர் அதில் மனம் உரம் பெற்றதாக இருக்கவேண்டும் என்றுவரும் குறட்பாவில் கூறுதல் காண்க.

எண்ணிய வெண்ணியாங்,கெய்தும் வெண்ணியர்
திண்ணிய ராகப் பெறின்பு

எனவே அன்புகலிந்த உள்ளத்தால் நெக்கு நெக்குருகி மன உறுதியுடன் வாயாரப்பாடி அழவேண்டும். அம்மை அப்பனாக நினையவேண்டும். அவன் நம் உள்ளங்கவர்வன். எல்லாம் நன்மையாய் முடியும். இன்பமே எந்நாளும் துன்பமில்லை சுபம்.

## ஸ்ரீ அருணகிரிநாதர் அவதார நல்விழா.

ஷை விழா சென்னை, குகனடிமை A. சாம்பசிவ நாய்க்கர் அவர்களால் சூளை, ஆண்டியப்ப நாய்க்கன் தெருவிலுள்ள தமது இல்லத்தில் எழுந்தருளியுள்ள முருகப்பெருமானுக்கு அபிஷேக ஆராதனை செய்து பல அடியார்கட்கு அன்னம் அளிக்கப்பட்டது.

---

புத்தக வரவு.

## இந்தியத்தாய் ஆண்டுமலர்.

அழகாக அச்சிடப்பட்டுள்ளது பல அழகிய கட்டுரைகளடங்கியது விலை ரூ. 1—0—0

கிடைக்குமிடம் :—

இந்தியத்தாய் ஆபீஸ், மதுரை.

---


**வெகு சரசம்! உத்திரவாதம்!!**

எங்கள் சொந்த தறியில் தயார் செய்யும்

**பட்டு-பாவாடை, ஜரிகை-ரவிக்கை,**

**பட்டு-சேலை தினுசுகள்**

**சாயத்திற்கும் ஜரிகைக்கும்**

உத்திரவாதத்துடன் கொடுக்கப்படும்.

வேண்டியவர்கள் உடனே ஆர்டர் செய்யவும்

**எஸ். ஆர். ஆதிநாராயண முதலியார்,**

**எஸ். எஸ். சம்பந்தமூர்த்தி முதலியார்.**

பட்டுஜவுளி வியாபாரம், திருக்கச்சிநம்பிதெரு, சின்னகாஞ்சிபுரம்.

---

**நம்பிக்கைப்பெற்ற ஆயுர்வேத ஔஷதங்கள்.**




சோல் ஏஜண்ட்ஸ்: யுனைடெட் கன்ஸர்ன், 54 பந்தர்தெரு, மதராஸ

தந்தி விலாசம் "செமந்தகா" திருச்சி.



கிருஷ்ண பரமாத்மாவின் கிரீடத்தை அலங்கரிக்கச் செய்தது செமந்தகமணி.

ஆனால்

இவ்வுலக மக்களின் அழகை அலங்கரிக்கச் செய்வது செமந்தகா வைரங்கள்.

என்று

இதுவரையில் செமந்தகா வைரங்களை வாங்கிப் பூரண திருப்தி அடைந்தவர்களால் போற்றப் படுகிறது.

இன்றுவரை வெளிவந்துள்ள வைரங்களில் தலை சிறந்தது.

எமது

"செமந்தகா வைரங்களே"

உறுதியிலும் ஜொலிப்பிலும் அசல் வைரங்களைப் போன்றது.

ஒரு முறை பரிக்ஷித்துப்பாருங்கள்.

தோடு சைஸ் வைரம். பேசரி சைஸ் வைரம்.

1-க்கு 1—0—0. 1-க்கு 0—14—0.

கிடைக்குமிடம்:---

மோதிரங்கய்ய செட்டியார் சன்

நகை வியாபாரம், திருச்சி.

மற்ற ஊர்களில் எமது அதிகாரம் பெற்ற ஏஜண்டுகளிடம் மட்டும் கிடைக்கும்

ஏஜண்டுகள் தேவை.

Edited by Thirumuruga Kirupanandavari, Printed & Published by M. Madhusoodana Sivam, at the Thiruppugal Amirtham Press, Kangayanellur, Via Katpadi. N. A.